1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற் குறிப்பு பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான அடிப்படையில் இருக்கிறது. மலைப் பகுதியிலே, ஆங்காங்கு மக்கள் தொகை குறைவாக இருந்த போதிலும் நூலகங்களை அமைக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய இலக்கியமாக திருக்குறள்.

54—(*வினா எண். 8316)—திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்குறள் தேசிய இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள் தேசிய இலக்கியமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட உலக மனித சமுதாயத்திற்கு எல்லாம் ஒட்டு மொத்தமான வாழ்க்கை நலன்களையும், சமூக நலன்களையும், அரசியல் வழி முறைகளையும் எடுத்துச் சொல்கிற திருக்குறள் தேசிய இலக்கியமாக ஆக்கப்பட வேண்டுமென்று முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூட கருத்துத் தெரிவித்தார்கள். அதை இந்த அரசின் கருத்தாக ஏற்று அது தேசிய இலக்கியமாக ஆக்கப்படுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கனவே நாம் மைய அரசுக்கு எழுதி இருக்கிறோம். எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொதுமறையாக இருந்து வருகிற பொதுத் தன்மையையும் சாதி மத சமயப் பாகுபாடுகளுக்கு அப்பால் ஒரே பொக்கிஷமாக இருக்கிற காரணத்தால் அது தேசிய இலக்கியமாக்கப்பட வேண்டுமென்று மீண்டும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி திருக்குறளை தேசிய இலக்கியமாக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்து இருக்கிறதோ அதைப் போல இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தையும் தேசிய நூலாக ஆக்குவதற்கு மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதி சமய மாச்சர்யங்களுக்கு அப்பாலே இருக்கின்ற பொதுத் தன்மை வாய்ந்த பொது மறையாக திருக்குறள் இருப்பதால் தேசிய இலக்கிய நூலாக ஆக்க நாம் வற்புறுத்துவோம். அதில் வெற்றி பெற்ற பிறகு மற்றவற்றைப் பற்றி பார்க்கலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் பெயர் இளங்கோவன் என்று இருப்பதால் சிலப்பதிகாரத்தை தேசிய நூலாக ஆக்க கேட்கிறார் போலும். (சிரிப்பு).

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறளை சொல்லிய பிறகுதான் சட்டமன்ற நடவடிக்கையை தினமும் ஆரம்பிக்கிறீர்கள். ஆகவே நம்முடைய சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானம் இது சம்பந்தமாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி அதன் வாயிலாக திருக்குறளை தேசிய நூலாக, இலக்கியமாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற நூலாய் திருக்குறள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடந்தை மாநகரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்.

55—(*வினா எண் 9751) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை மாநகரில் இரண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதில் ஒன்றான வலங்கைமான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை பாபநாசம் நகருக்கு மாற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.